

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு "மகத்தான தலைவர் கலைஞர் என்ற தலைப்பில் மாணவர்களுக்கான கருத்தரங்கம் திருச்செங்கோட்டில் நடைபெற்றது. கருத்தரங்கில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவருமான திருச்சி சிவா எம்.பி., நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும் முன்னாள் எம்.எல்.ஏ.வுமான கே.எஸ். மூர்த்தி, மாநில மாணவர் அணி செயலாளர் ஈரோடு வீரமணி ஜெயக்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். கருத்தரங்கில் மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் ஆர். சுரேஷ்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியன், திருச்செங்கோடு மேற்கு நகர செயலாளர் நடேசன், கிழக்கு நகர செயலாளர் கார்த்திகேயன், நகர்மன்றத் தலைவர் நளினி சுரேஷ்பாபு மற்றும் மாணவர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட 1500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர்

# துறைமுகம் கே.காஜா இல்லத் திருமணம்!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நடைபெறுகிறது!

*சென்னை, ஜூன் 30 -*

தஞ்சை மாவட்டம், திருபுவனம் ஹாஜி எம்.ஐ. சாதிக் பாஷா - ஹாஜிமா எஸ்.சைரா பானு ஆகியோரின் புதல்வர் எஸ். ஹனீப் கானுக்கும், கழக தலைமை நிலையச் செயலாளர் ஹாஜி துறைமுகம் கே.காஜா - ஹாஜிமா கே.காத்தூன் பீவி ஆகியோரின் பேத்தி - ஜனாப் எஸ்.முஹம்மது ரபீக் - ஜனாபா எம்.ஜமீல் பாத்திமா ஆகியோரின் புதல்வி ஹாஜிமா எம்.சமீனா சப்ரியத்துக்கும் மணவிழா 5.7.2026 - ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில்சென்னை திருவேற்காடு, ஜி.பி.என். பேலஸில் நடைபெறுகிறது.

இத்திருமணம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நடைபெறுகிறது.

இத்திருமணத்தில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., ஆர்க்காடு நா.வீராசாமி, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி எம்.எல்.ஏ., க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆ.இராசா எம்.பி., திருச்சி சிவா எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், மு.பெ.சாமிநாதன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், அன்பகம் கலை, பூச்சி எஸ்.முருகன், எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப. தாயகம் கவி, ஆர்.பத்மநாபன், பொன் தனபால், அவிசேக் மீரான், செய்யது மீரான்,

கழக எம்.பி.க்கள் எஸ். ஜெகத்ரட்சகன், தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, பி.வில்சன், தமிழச்சி தங்கபாண்டியன், இரா. கிரிராஜன், அருண்நேரு, தங்க தமிழ்ச்செல்வன், டி.எம்.செல்வகணபதி, எஸ்.ஆர்.சிவலிங்கம், சு. கல்யாணசுந்தரம், கே.ஆர்.என். ராஜேஷ்குமார், டி.எம்.கதிர் ஆனந்த், கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், ச.முரசொலி, கே.இ.பிரகாஷ், த.செல்வம், எம்.எஸ்.தரணிவேந்தன், கணபதி பி.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, ஆ. மணி, சி.என்.அண்ணாதுரை, தே.மலையரசன், ராணி ஸ்ரீகுமார், ராஜாத்தி (எ) சல்மா உள்ளிட்ட மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சிறுபான்மை நல உரிமைப் பிரிவு நிர்வாகிகள், மூத்த வழக்கறிஞர்கள், மேயர், துணை மேயர், மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நன்றி கூறுகிறார்.

## கேபிள் சரவணன் முன்னிலை!

# தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் ஆர்.இராஜேந்திரன் வழங்கினார்!

*சேலம், ஜூன் 30 -*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக சேலம் மாநகர தி.மு.க. இளைஞரணி சார்பில் ஜான்சன் பேட்டையில் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது .

இந்த நிகழ்ச்சிக்கு மாநகர இளைஞரணி அமைப்பாளர் கேபிள் சரவணன் முன்னிலை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சருமான ஆர். ராஜேந்திரன் தலைமை தாங்கி தூய்மைப் பணியாளர்கள் 200 பேருக்கு பேண்ட் - சட்டை மற்றும் சேலைகளை வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது,

தமிழகத்தில் அனைத்து மக்களும் சமம் என்ற நிலைமையை கொண்டு வந்தவர் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஏழை மக்கள் வாழ்வு மேம்பட அயராது உழைத்தவர். அவரது வழியில் கடந்த 5 ஆண்டு காலம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவலர்களும் முதலமைச்சராக இருந்து சிறப்பான ஆட்சி நடத்தி பாராட்டு பெற்றார். மகளிர் உரிமைத்தொகை, மகளிர் விடியல் பயணம் உள்பட எண்ணற்ற திட்டங்களை தந்தவர். மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தால் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 2000 ஆக உயர்த்தப்பட்டிருக்கும். இல்லத்தரசி கூப்பன் 8000 வழங்கப்பட்டிருக்கும்.

ஆட்சிக்கு வராவிட்டாலும் தி.மு.க. தலைவரின் அறிவுறுத்தல்படி எப்போதும் உங்களுக்கு உறுதுணையாக நாங்கள் இருப்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் ரகுபதி, துணைச் செயலாளர் கணேசன் , பகுதி செயலாளர்கள் சார்ந்த மூர்த்தி, சரவணன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் சோளம்பள்ளம் கார்த்தி, ரவி, மாநகர துணை அமைப்பாளர்கள் சிவராஜ், சுகைல் ரகுமான், வெங்கடேஷ் மற்றும் வார்டு செயலாளர்கள் ஜெயசீலன், சிவக்குமார் மற்றும் பகுதி, வார்டு இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி சேலம் மத்திய மாவட்ட தி .மு.க. சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக சேலம் மாநகர தி.மு.க. இளைஞரணி சார்பில் ஜான்சன் பேட்டையில் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சிக்கு மாநகர இளைஞரணி அமைப்பாளர் கேபிள் சரவணன் முன்னிலை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சருமான ஆர் ராஜேந்திரன் தலைமை தாங்கி தூய்மைப் பணியாளர்கள் 200 பேருக்கு பேண்ட் , சட்டை மற்றும் சேலைகளை வழங்கினார்.

# பொய்யிலே பிறந்து... பொய்யிலே வளர்ந்து...

எல்லோரையும் விலைக்கு வாங்கலாம் என த.வெ.கவின் அதிகார போதைக்கும் எதை வேண்டுமானாலும் விற்கலாம் எனும் வைகோவின் பேராசைக்கும் முதன்முதலாக ஒரு அடி விழுந்தி ருக்கிறது. த.வெ.க குதிரை பேரத்தில் ஈடுபடுகிறது என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பகிரங்கமாக குற்றம்சாட்டியபோது, 'அய்யோ நாங்களா நாங்கள் தூய சக்தி ஆயிற்றே ' என்றெல்லாம் நாடகம் ஆடியவர்களுக்கு வைகோ ஒரு முடிவுரை எழுதியிருக்கிறார்.

' உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வென்ற இரண்டு ம.தி.மு.க எம்.எல்.ஏக்களையும் ராஜினாமா செய்து அழைத்து வாருங்கள் நான் அவர்களுக்காக இடைத்தேர்தலில் பிரச்சாரம் செய்கிறேன்' என்று முதல்வர் விஜய் சொன்னதை பகிரங்கமாக வெளிப்படுத்தியிருக்கிறார். எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்களை ராஜினாமா செய்ய வைத்து தன்பக்கம் இழுக்கும் குதிரை பேர யுத்தியின் நாயகனான அமித்ஷாகூட இவ்வளவு துணிச்சலாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டதில்லை. குதிரை பேர அரசியலின் நாயகனாக த.வெ.க தலைவர் திகழ்கிறார் என்பதை தனது வாக்குமூலத்தின் மூலம் பிரகடனப்படுத்தியிருக்கிறார் வைகோ.

ஆனால் இந்த வெட்கக்கேட்டை மறைக்க அவர் முன்வைக்கும் வாதம் என்ன தெரியுமா? ''எங்கள் கட்சி எம்.எல்.ஏக்களை ராஜினாமா செய்யவிடாமல் தி.மு.க தடுக்கிறது. அதில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் ம.தி.மு.கவிலிருந்து விலகி தி.மு.கவில் சேர்ந்துவிட்டார். இன்னொரு சட்டமன்ற உறுப்பினர் ம.தி.மு.கவில் தொடர்ந்தாலும் எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்ய மறுத்துவிட்டார். இதுமட்டும் குதிரைபேரம் இல்லையா" என்று கேட்கிறார். இதை விட கேவலமான ஒரு வாதம் இருக்கமுடியுமா?



**மனுஷ்ய புத்திரன்**

**மாநில ஆலோசகர், தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி**

ஒரு கூட்டணியில் ஒரு கட்சி வேட்பாளர் அந்த கூட்டணியின் முதன்மை கட்சி சின்னத்தில் போட்டியிட்டு வென்ற பிறகு கூட்டணியை முறிப்பது மட்டுமல்ல அந்த எம்.எல். ஏக்களையும் ராஜினாமா செய்யச்சொல்லி நிர்ப்பந்திப்பது பச்சையான வெளிப்படையான குதிரைபேரம். மேலும் சட்டப்படியே ஒருவர் இன்னொரு கட்சி சின்னத்தில் நின்று போட்டியிடும்போது தனது கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியையே ராஜினாமா செய்துவிட்டுதான் போட்டியிடுகிறார். அந்தவகையில் சட்டப்படி அந்த இரண்டு உறுப்பினர்களும் ம.தி.மு.க உறுப்பினர்களே கிடையாது. முக்கியமாக வைகோவிற்கு அவர்களை விற்பதற்கான உரிமை கிடையாது. அவர்கள் முழுக்க முழுக்க தி.மு.க சின்னத்தில் போட்டியிட்டு தி.மு.க வாக்குகளை பெற்று சட்டமன்றம் சென்றவர்கள். அவர்களை ராஜினாமா செய்யச்சொல்லி நிர்பந்திப்பதும் அந்த காலியிடங்களை த.வெ.கவிற்கு தாரைவார்க்க திட்டமிடுவதும், அவர்களை த.வெ.கவிடம் கொண்டுபோய் ஒப்படைக்க முயற்சிப்பதும் அரசியல் கீழ்மையின் உச்சகட்டம். அந்த இரண்டு ம.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவர் வைகோவின் இந்த கீழ்மையை எதிர்த்து தி.மு.கவில் தன்னை இணைத்துக் கொண்டார். இன்னொருவர் தான் ம.தி.மு.கவில் இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய முடியாது என்று கூறிவிட்டார். இரண்டு பேருக்காகவும் த.வெ.கவிடம் பேரம்பேசிவிட்டுவந்த வைகோவிற்கு இப்போது என்ன செய்வதென்று தெரியவில்லை.

வைகோ இந்த கூட்டணி முறிவிற்கு முன்வைக்கும் காரணங்களிலாவது ஏதேனும் நாணயம் இருக்கிறதா? அவர் சொல்லும் முதலாவது காரணம் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடச் சொல்லி தி.மு.க நெருக்கடி கொடுத்ததாம். ம.தி.மு.கவிற்கு குறைந்தபட்ச வாக்குவங்கிகூட இல்லை என்பதை தெரிந்துதான் தி.மு.க உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வைகோவைக் கேட்டுக்கொண்டது. அதிலும் ஒரு தொகுதியில் ம.தி.மு.க சின்னத்திலேயே போட்டியிடலாம் என்று சொன்னபோது கூட, ' இல்லை நாங்கள் உதயசூரியன் சின்னத்திலேயே போட்டியிடுகிறோம் ' என்று சொன்னவர் வைகோ. இப்போது நரம்பில்லாத நாக்கு மாற்றிப் பேசுகிறது.

மேலும் இடதுசாரிகளும் வி.சி.கவும் முஸ்லீம் லீக்கும் அவரவர் சின்னத்தில் போட்டியிட தி.மு.க இணங்கியபோது ம.தி.மு.கவை மட்டும் கட்டாயப்படுத்த என்ன அவசியம் இருக்கிறது. அப்படியே கட்டாயபடுத்தியிருந்தால் கூட்டணியை விட்டு போவதில் அவருக்கு என்ன தடை இருந்தது? அப்போதும் யாராவது வருவார்களா என த.வெ.க கதவை திறந்துவைத்துதான் காத்துக்கொண்டிருந்தது.

வைகோவின் துயரம் என்னவென்றால் த.வெ.க அதிக இடங்களைப் பெற்று அதேசமயம் பெரும்பான்மை இல்லாத சூழல் ஏற்படும் என்று அவர் கற்பனைகூட செய்யவில்லை. தி.மு.க கூட்டணி கட்சிகள் ஒவ்வொன்றாக த.வெ.க பக்கம் போனதும் தனக்கும் விழவேண்டிய 'லாட்டரி ' ஒரு நம்பரில் தவறியது போல வைகோ மனமுடைந்து விட்டார். காரணம் தன் கட்சியை சேர்ந்தவர்கள் உதயசூரியன் சின்னத்தில் வென்றதால் அவர்களைக் கூட்டிக்கொண்டு கிளம்ப கட்சித்தாவல் தடைச்சட்டம் பெரும் தடையாக மாறிவிட்டது. ஒரு விதத்தில் த.வெ.க அமைச்சரவையில் இடம்பெற்ற கட்சிகளைப் பார்த்து கடும் பொறாமையால் ஏற்பட்ட ஒரு பதற்றம் எனலாம். அதுதான் தி.மு.க தன் கைகளைக் கட்டிப்போட்டுவிட்டது என்று கதறுகிறார். குதிரை பேரத்தில் ஈடுபட முடியாமல் வைகோ என்ற பொய்க்கால் குதிரையை லாயத்தில் கட்டியதால்தான் இவ்வளவு கோபம்.

அடுத்ததாக வைகோவின் இன்னொரு பொய், தி.மு.க கூட்டணியில் எட்டு வருடங்களாக மனநெருக்கடியோடு இருந்தாராம். அந்த மனநெருக்கடியோடுதான் முதலில் தனக்கும் பிறகு தன் மகனுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொண்டாரா?

வைகோ தி.மு.கவிற்கு செய்த தொடர் துரோகங்களுக்காக கலைஞரும் இன்றைய தி.மு.க தலைவரும் அவரைத் தொடர்ந்து மன்னித்தார்கள் என்பதுதான் உண்மை. வைகோ இதுவரை வகித்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவி அனைத்தும் தி.மு.கவின் கருணையால் பெற்றவை. தி.மு.கவை உடைத்து கட்சியை அழிக்க முயற்சித்தவரை, முன்னர் ஒருமுறை தி.மு.க கூட்டணிக்குத் துரோகம் செய்து அ.தி.மு.க கூட்டணியில் அடைக்கலம் ஆனவரை, மக்கள்நல கூட்டணியை அமைத்து சொற்ப வாக்குகளில் 2016இல் தி.மு.கவை ஆட்சிக்கு வரவிடாமல் தடுத்தவரை பா.ஜ.கவிற்கு எதிரான ஒரு மதசார்பற்ற வலிமையான கூட்டணியை அமைக்கவேண்டும் என்பதற்காகவே தி.மு.க, ம.தி.மு.கவை கூட்டணியில் இணைத்துக்கொண்டது. ஆனால் 2016 தேர்தலின் போது கலைஞரை சாதிப்பெயரை சொல்லி இழிவுபடுத்திய வைகோவை எந்த தி.மு.க தொண்டனும் இன்றுவரை மன்னிக்கத் தயாராக இல்லை.

வைகோ சொல்லும் இரண்டாவது காரணம் தி.மு.க அ.தி.மு.க கூட்டணி அமைக்க முயற்சித்தாகவும் பா.ஜ.க அ.தி.மு.க கூட்டணியில் இருப்பதால் அது மதசார்பின்மைக்கு இழைத்த துரோகம் என்றும் பேசுகிறார். நடக்கவே நடக்காத ஒன்றை நடந்ததாக கூறி தனது இழி செயலுக்கு நியாயம் தேடுகிறார். பா.ஜ.வோடு தமிழ்நாட்டில் கூட்டணி அமைத்து மோடியை 'வெண்தாடி பெரியார்' என வியந்தோதிய வெட்கம்கெட்ட வாய்தான் வைகோவுடையது. இவர்தான் இப்போது பாஜகவை பற்றிப் பேசுகிறார்.

வைகோ தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.க என எல்லோருடமும் மாறி மாறி கூட்டணி வைக்கலாம். ஆனால் தி.மு.க – அ.தி.முக கூட்டணி என்று ஒரு வதந்தி பரப்பினாலே பொங்கி எழுந்துவிடுவாராம். சோறு கண்ட இடம் சொர்க்கம் என்பதை மறைக்க எத்தனை நாடகம்.

வைகோ இப்போது ஆடிக்கொண்டிருக்கும் இந்த பசப்பு நாடகம் அவரது அரசியல் வாழ்வின் இறுதி அத்தியாயத்தை எழுதிக் கொண்டிருக்கிறது.

## ஆர்.சுரேஷ்குமார் தலைமை! பாலசுப்பிரமணியன் வரவேற்புரை!

# திருச்செங்கோட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் கருத்தரங்கம்!

### திருச்சி சிவா எம்.பி. – கே.எஸ். மூர்த்தி – ஈரோடு வீரமணிஜெயக்குமார் பங்கேற்பு!

*நாமக்கல், ஜூன் 30 -*

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு "மகத்தான தலைவர் கலைஞர்" என்ற தலைப்பில் மாணவர்களுக்கான கருத்தரங்கம் திருச்செங்கோட்டில் நடைபெற்றது.

மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் ஆர். சுரேஷ்குமார் தலைமை வகித்தார். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியன் வரவேற்றார். திருச்செங்கோடு மேற்கு நகர செயலாளர் நடேசன், கிழக்கு நகர செயலாளர் கார்த்திகேயன், நகர் மன்றத் தலைவர் நளினி சுரேஷ்பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கருத்தரங்கில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவருமான திருச்சி சிவா எம்.பி., நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும் முன்னாள் எம்.எல்.ஏ.வுமான கே.எஸ். மூர்த்தி, மாநில மாணவர் அணி செயலாளர் திருமதி ஈரோடு வீரமணி ஜெயக்குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர்.

கருத்தரங்கில் பேசிய திருச்சி சிவா எம்.பி., அண்ணா வகுத்த இருமொழிக் கொள்கை, மாநில உரிமைகள், புதிய கல்விக் கொள்கைக்கு எதிர்ப்பு உள்ளிட்ட கொள்கைகளை தற்போதைய ஆட்சியும் பின்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். இந்தியாவில் 2035ஆம் ஆண்டுக்குள் உயர்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை 50 சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட் டுள்ள நிலையில்,தி.மு.க. ஆட்சியிலேயே தமிழ்நாட்டில் அந்த எண்ணிக்கை 51 சதவீதத்தை எட்டியதாக கூறினார்.

மேலும், சமூகநீதி மற்றும் இடஒதுக்கீட்டு கொள்கையால் அனைத்து சமூகத்தினருக்கும் உயர்கல்வி மற்றும் அரசு பணிகளில் வாய்ப்பு கிடைத்துள்ளதாக குறிப்பிட்ட அவர், தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்ற த்திற்கும் திராவிட இயக்கமே காரணம் என்றார். ஆட்சி மாறியது ஆதங்கம் அல்ல; அரசு இயந்திரம் துருப்பிடிக்காமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அண்ணாவின் சிந்தனையே முக்கியமானது என்றும் தெரிவித்தார்.

"நாம் எதையும் இழக்கவில்லை. ஒன்றரை லட்சம் கோடி வாக்காளர்கள் நமக்கு வாக்களித்துள்ளனர். இது ஒரு இடைவேளை மட்டுமே. மீண்டும் ஆட்சிக்கு வருவோம். தமிழ்நாட்டில் நம்மைத் தவிர்த்து யாரும் ஆட்சிக்கு வர முடியாது. இதுகுறித்து யாரும் கவலைப்படத் தேவையில்லை" என்று தொண்டர்களுக்கு அவர் நம்பிக்கை அளித்தார்.

கருத்தரங்கில் பேசிய மாநில மாணவர் அணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார், திமுக ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதால் தமிழ்நாட்டில் பெண்கள் அதிகளவில் பணிக்குச் செல்வதாக மத்திய அரசின் அறிக்கையே தெரிவிப்பதாக கூறினார். தற்போதைய த.வெ.க. ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாக குற்றம் சாட்டிய அவர், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சமூக வலைத்தளங்களில் தவறான தகவல்களை பரப்பி மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி வருவதாகவும் விமர்சித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருச்செங்கோடு ஒன்றிய செயலாளர்கள் தங்கவேல், தாமரைச்செல்வன், அருண்குமார், நகர மற்றும் ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள், மாணவர் அணி பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், மாணவர் அணியைச் சேர்ந்த 1,500க்கும் மேற்பட்டோர் கருத்தரங்கில் பங்கேற்றனர். இறுதியாக மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் நானா நாணி கார்த்தி நன்றி கூறினார்